**இலங்கை சர்ட் (பிரைவேட்) லிமிடட் கம்பனி - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இலங்கை சர்ட் (பிரைவேட்) லிமிடட் கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானங்கள் செலவுகள் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். இந்த அறிக்கையின் நிதிக் கூற்று கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பென்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவின் உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கையில் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு கம்பனியினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க கம்பனி செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

### 1.5 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் இன்போமேசன் கொமியுனிகேசன் டெக்னோலஜி ஏஜன்சி (பிரைவேட்) லிமிடட் கம்பனியிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 40,215,928 மீதியை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | இக்கணக்கு மீதி தொடர்பாக பரீட்சிப்பதற்காக ஒரு குழு தொழில்நுட்ப அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளதுடன் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீமானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ முதலிவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பிரிவு | வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் வருடாந்த பாதீடு, செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் ஐந்து ஆண்டுகளுக்கான தந்திரோபாயத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனி அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டினை தயாரித்து அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கம்பனிக்காக தயாரிக்கப்பட வேண்டிய 05 ஆண்டுகளுக்கான தந்திரோபாய திட்டம் 2023 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் வருடாந்த பாதீடு, செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் தந்திரோபாய திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செயற்பாட்டு கையேடு | | | |
| (i) | 3.2 ஆம் பந்தி | கம்பனிக்காக அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் அங்கீகரித்த ஆளணியினர் எண்ணிக்கை இருக்கவில்லை. | இணங்கிக் கொள்கிறேன். நிறுவனம் தொடர்பாக ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்த்துதல் நடைமுறை தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது. | செயற்பாட்டு கையேட்டின் பிரகாரம் கம்பனிக்காக ஆட்சேர்ப்பு மற்றும் ஆளணியினர் எண்ணிக்கை அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | 3.4 ஆம் பந்தி | ஒவ்வொரு அரசாங்க தொழில் முயற்சிக்கும் ஆளணி பதவியுரிமைத் திட்டம் (Succession Plan) இருக்க வேண்டிய போதிலும் கம்பனி பதவியுரிமைத் திட்டத்தினை தயாரித்திருக்கவில்லை. | இதுவரை கம்பனி ஆளணியினர் பதவியுரிமைத் திட்டத்தினை (Succession Plan) தயாரித்திருக்கவில்லை. எனினும் ஆட்சேர்ப்பு நடைமுறையினைத் (SOR) தயாரித்ததோடு உரிய பதவி உரிமைத் திட்டத்தினை ஆட்சேரப்பு நடைமுறையிலிருந்து அறிந்து கொள்ளக்கூடிய வகையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்பாட்டு கையேட்டின் பிரகாரம் ஆளணியினர் பதவி உரிமைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (iii) | 4.3 ஆம் பந்தியின் iii ஆம் உபபிரிவு | பெறுவனவுகள் மற்றும் வழங்கல்கள் ஆகிய இரண்டினையும் முகாமைத்துவம் செய்வதற்காக முறையான பொருள் இருப்பு பதிவேட்டு முறைமை காணப்படுகின்றது என கம்பனி சான்றுபடுத்த வேண்டிய போதிலும் பொருள் இருப்பு பதிவேடு சம்பந்தமாக ஒரு முறைமை அறிமுக்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை | பெறுவனவுகள் மற்றும் வழங்கல்கள் ஆகிய இரண்டினையும் முகாமைத்துவம் செய்வதற்காக முறையான பொருள் இருப்பு பதிவேட்டு முறைமை காணப்படுகின்றது என கம்பனி சான்றுபடுத்த வேண்டிய போதிலும் பொருள் இருப்பு பதிவேடு சம்பந்தமான ஒரு முறைமை அறிமுகப்படுத்தப்படவில்லை. | செயற்பாட்டு கையேட்டின் படியான ஒரு முறைமை அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | 6.1 ஆம் பந்தியின் ii ஆம் உபபிரிவு | வலுவான ஒரு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை அமுல்ப்படுத்தப்படுவதை ன சான்றுபடுத்துவதற்கு பணிப்பாளர் சபையினால் முகாமைத்துவத்திற்கு நிதி அதிகாரம் ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை . | இணங்கிக் கொள்கிறேன். 2024 ஆம் ஆண்டிற்குத் தயாரிக்கப்பட்ட பணிப்பாளர் சபையினால் முகாமைத்துவத்திற்கு நிதி அதிகாரம் ஒப்படக்கப்படும். | பணிப்பாளர் சபையினால் முகாமைத்துவ நிதி அதிகாரம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 21,678,519 வரிக்குப் பின்னைய மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை 7,902,861 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 13,775,658 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு சயிபர் பாதுகாப்பு சேவையை வழங்குவதன் மூலம் உழைத்த வருமானம் ரூபா 14,136,763 ஆல் அதாவது 153 சதவீதத்தால் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கம்பனிக்காக அங்கீகரித்த ஆட்சேரப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறை இல்லாதிருந்தும் 2013 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆளணியினர்களுக்கு செயலாற்றலினை மதிப்பீடு செய்ததன் பின்னர் 05 சதவீதத்திலிருந்து 13 சதவீதம் வரையான சம்பள ஏற்றம் வழங்கப்பட்டிருந்தது. மேலும் கம்பனியின் அனைத்து ஆளணியினரும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவர்களில் இரண்டு நபர்களுக்கான பதவியுயர்வினை 2023 ஆகஸ்ட் 01 ஆந் திகதி பணிப்பார் சபை அங்கீகரித்திருந்தது. | இலங்கை சர்ட் நிறுவனம் அரசாங்க தொழில் முயறிசிகள் திணைக்களத்தின் செயற்பாட்டு கையேட்டின் பிரகாரம் “Annexure A” இன் கீழ் காணப்படுகின்ற ஒரு நிறுவனம் என்பதனால் பணிப்பாளர் சபைக்கு நிறுவனத்தின் தாபனக் கட்டமைப்பினைத் தீர்மானிப்பதற்கு ஆட்சேரப்பு மற்றும் பதவியுயர்வு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மற்றும் சம்பளத்தை தீர்மானிப்பதற்கு அதிகாரம் உள்ளது. | ஒப்பந்த அடிப்படையில் ஆளணியினரைச் சேர்த்துக்கொள்ளும் போது சேவைக்காலம், செலுத்தப்படுகின்ற வேதனம் என்பன முன்னரே காட்டப்படுவதனால் செயற்பாட்டு கையேட்டின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைக்காக உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கம்பனி 2023 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,977,653 செலவு செய்து திறைசேரி/ பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி சுகாதார மருத்துவ காப்புறுதியினை வழங்கியிருந்தது. மேலும் ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 2,500 வீதம் சுகாதார மருத்துவ படியும் ரூபா 15,000 வீதம் பிரயாணச் செலவு படியும் செலுத்தப்பட்டிருந்தும் அதற்காகத் திறைசேரி/ பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | இலங்கை சர்ட் நிறுவனம் 2018 ஆம் ஆண்டின் போது ICTA நிறுவனத்திலிருந்து சுயாதீனமாக செயற்படுகின்ற ஒரு நிறுவனமாக மாற்றப்பட்டிருந்தது. அதற்கிணங்க மாதாந்த பிரயாணச செலவுப் படி மற்றும் சுகாதார மருத்துவ படி வழங்கப்படுவதுடன் அது உழைக்கும் போதே செலுத்தும் வரிக்கு உட்பட்டதாகும். இலங்கை சர்ட் நிறுவனம் அதன் ஊழிர்களுக்கு வழங்குகின்ற சுகாதார மருத்துவ காப்புறுதியானது பணிப்பாளர் சபையின் சிபாரிசின் கீழ் பொதுத்திறைசேரியின் அங்கீகாரத்திற்காக தொழில்நுட்ப அமைச்சின் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | அனைத்து கொடுப்பனவுகளுக்குமாக பணிப்பாளர் சபை மற்றும் பொதுத்திறைசேரி முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கம்பனியின் அங்கீகரித்த ஆளணியனருக்குள் உள்ளடக்கப்பட்டிருக்காத நிதி முகாமையாளர் மற்றும் சட்டமும் ஒழுங்குபடுத்தலும் செயற்பாட்டு முகாமையாளர் ஆகிய இரண்டு பதவிகளுக்காக இரண்டு உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொண்டு முறையே சம்பளமும் படிகளுமாக ரூபா 2,517,500 மற்றும் ரூபா 675,000 மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | நிதி முகாமையாளரின் தேவைப்பாடு உருவாகியிருந்ததுடன் 2022 நவம்பர் மாதம் நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது நிதி முகாமையாளரினைச் சேர்த்துக் கொள்வதற்காக தீர்மானிக்கப்பட்டது. பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் சட்டமும் ஒழுங்கும் செயற்பாட்டு முகாமையாளரரைச் சேர்த்துக்கொள்வதற்காக செலவுகளைக் கட்டுப்படுத்தும் சுற்றறிக்கையினைப் பின்பற்றி புதிய ஆட்சேர்ப்புக்களுக்காக தொழில்நுட்ப அமைச்சினூடாக அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரத்தினை வேண்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சேர்த்துக்கொள்வதற்கு முன்னர் பதவிகள் அங்கீகரித்துக் கொள்ளப்படுதல் வேண்டும். |